# NEWS LETTER

**Contact Us !**

Main Road,Puthukudiyiruppu (30158), Batticaloa, Sri Lanka.

Phone : +94 653125555 | +94 777105569
WhatsApp / Viber: +94 77 677 0780

Email : vivekananda.cflk@gmail.com
www.vcf.lk

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569

Vivekananda Community Foundation

## March 2025



## இயற்கை பாதுகாப்பு

எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினூடாக சமூக மாற்றத்திற்கான வலுவூட்டலுக்காக சமூகம் சார்ந்த பல்வேறு செயற்பாடுகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

அந்த வகையில் பசுமைப் புரட்சித் திட்டம் எனும் தொனிப்பொருளில் சுற்றாடலை மையப்படுத்தியதாக பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கான பிரதேச செயலக சுற்றாடல் பாதுகாப்பு உத்தியோகத்தரின் ஆலோசனையின் கீழ் எமது கல்லூரி பணியாளர்கள், பயிலுர்கள் மற்றும் பாடசாலையில் உள்ள மாணவர்கள் இணைந்ததான எமது **சுற்றாடல் மேம்பாட்டுப் படையணி** ஊடாக முன்னெடுத்து வருகின்றோம்.

அதனடிப்படையில், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட களுதாவளை பிரதேசத்தின் 3ம் குறிச்சி கடற்கரைப் பிரதேசத்தில் சிரமதான நிகழ்வு இடம்பெற்றது.



மத்திய சுற்றாடல் அதிகார சபையின் இணைப்பாளர் திருமதி.ரஜனி பாஸ்கரன் அவர்களின் தலைமையில் சுற்றாடல் மேம்பாட்டுப் படையணியின் உறுப்பினர்கள், விவேகானந்த சமுதாய அறக்கட்டளை, விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் சேவையாளர்கள் உள்ளிட்ட கல்லூரியின் பயிலுனர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.



# மகளீர் தினம்

எமது சமுதாயத்தின் மகளீருக்கான அங்கீகாரத்தை வழங்குவது எமது கடமையாகும். அதனடிப்படையில் சமுக நலன்புரி அமைப்பு மற்றும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் பயனாளிகளான 10 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களைச் சேந்த பெண்களை கௌரவிக்கும் முகமாக உலக மகிளீர் தினத்தினை முன்னிட்டு அவர்களின் முயற்சியை பாராட்டி கௌரவிக்கப்பட்டதோடு பரிசுப்பொருட்களும் வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட மண்முனை பற்று பிரதேச செயலாளர் திருமதி.தட்சணகௌரி தினேஸ் அவர்கள் பெண்களின் முக்கியத்துவம் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களை உரையாற்றியதோடு எமது சாதனைப் பெண்களையும் பாராட்டி அவர்களை கௌரவித்தார். அதனைத் தொடர்ந்து சமுக நலன்புரி அமைப்பு மற்றும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் சேவையாளர்கள் இணைந்து எமது பிரதம அதிதியை பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.









மேலும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.க.பிரதீஸ்வரன் அவர்களினால் பெண்களின் சம உரிமை மற்றும் பெண்களின் முக்கியத்துவம் பற்றியும் எமது சாதனைப் பெண்கள் பற்றியும் சிறப்புரையாற்றப்பட்டதுடன் அறக்கட்டளையினால் பெண்கள் தலைமைதாங்கும் குடும்பப் பெண்களுக்கு முன்னெடுக்கும் வாழ்வாதார முதலீட்டு செயற்பாடுகள் சம்பந்தமான தெளிவூட்டலும் வழங்கினார் .

# பெற்றோருக்கான தெழிவூட்டல்

உலகம் தொழில்நுட்பத்தின் உச்சத்தை எட்டிக்கொண்டிருக்க நம் சமூகத்தில் கணினியினை பயன்படுத்திக் கூட பார்க்காத இளம் சந்ததி இருக்கத்தான் செய்கின்றது. எனவே அவர்களை மையப்படுத்தி 3 மாதகால பயிற்சியாக Office Management & IT வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டது.

இப் பயிற்சிநெறியானது எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் அனுசரணையுடன் எமது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் நடைமுறைப்படுத்தலினூடாக இச்செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





அந்த வகையில் கொம்மாதுறை கிளையில் ஆரம்பிக்கப்பட்ட Office Management & IT பயிற்சிநெறியின் பெற்றோருடன் கலந்துரையாடலாது ஒழுங்படுத்தப்பட்டிருந்தது. இக்கலந்துரையாடலானது நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.க.பிரதீஸ்வரன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது பயிற்சிநெறி பற்றி பெற்றோருக்கு தெழிவூட்டப்பட்டதோடு மாணவர்களின் எதிர்கால திட்டம் பற்றி கலந்துரையாடப்பட்டது.

இவ்வாறான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இளம் தலைமுறையினரிடையே கணினிக் கல்வி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு மட்டுமன்றி எதிர்காலத்தின் தொழிநுட்பப் புரட்சிக்கும் அவர்களைத் தயார்படுத்துவதாக அமையும்.







# அடிப்படைக் கணினி பயிற்சிநெறி தொடர்பான கலந்துரையாடல்

இளைஞர்கள் மாற்றத்திற்கான வலுவூட்டல் எனும் திட்டத்தினூடாக காரைதீவு, அம்பாறை பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட புதிய நிலையத்தில் அடிப்படைக் கணினி பயிற்சிநெறியானது ஆரம்பித்தல் தொடர்பான கலந்துரையாடலானது பெண்கள் சமூகம் (Women Society) மற்றும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் திட்ட முகாமையாளருடனான கலந்துரையாடலானது இடம்பெற்றது. இக் கலந்துரையாடல் மூலம் பயிற்சிநெறி பற்றிய விளக்கம் மற்றும் பெண்களுக்கான மாற்றத்தினை ஏற்படுத்துவது பற்றிக் கலந்துரையாடப்பட்டது.








## தையல் பயிற்சிநெறி

விவேகானந்த சமுதாயக் கல்லூரியானது சமூகத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகளில் ஒன்றாக தங்கி வாழும் பெண்களை வலுவூட்டும் நோக்கில் வறுமைக் கோட்டின் கீழ்வாழும் பெண்களை தெரிவு செய்து அவர்களுக்கான தையற் பயிற்சிநெறியானது மூன்று மாத காலமாக நடைபெற்றது.

இப்பயிற்சிநெறியின் பெறுபேற்றினை அறிந்துகொள்ளும் வகையில் அவர்களுக்கான பரீட்சை நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் சேவையாளர்களும் கலந்து கொண்டு பயிற்சிநெறி சிறந்த பெறுபேறு மற்றும் அவர்களின் கருத்துக்கள் என்பன அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்ததுடன் அவர்களுக்கான அடுத்த கட்ட செயற்பாடுகள் பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது.

# கணினி பயிற்சிநெறி தொடர்பான களவிஜயம்




பாடசாலை மாணவர்கள் ஒவ்வொருவரும் தமக்குள் அடிப்படைக் கணனி பற்றிய அறிவினை வளர்த்துக் கொள்ளுதல் அத்தியாவசியமானதொன்றாகும். அந்த வகையில் பின்தங்கிய கணினிப் பயிற்சி பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு பிரதேசங்களில் வாழும் மற்றும் தேவைப்பாடுடைய மாணவர்களுக்கான அடிப்படைக் கணிணி வழங்கி வருகின்றோம்.

அதனடிப்படையில் முன்னேற்றகரமான ஒரு மாணவர் சமுதாயத்தை கட்டியெழுப்பும் நோக்கில் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது வெருகலில் அமைந்துள்ள துவாரகா வித்தியாலத்தில் தரம்-9, தரம்-10 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கணினி வகுப்புகளை நடைமுறைப்படுத்தி வருகிறது. அதன் பிரகாரம் அப் பாடசாலையின் மேற்பார்வையைத் தொடர்ந்து மதிப்பீட்டு வகுப்பிற்கான களவிஜயத்தினை எமது சேவையாளர்கள் மேற்கொண்டிருந்தனர்.




இக்களவிஜயத்தின் மூலமாக மாணவர்களின் தற்போதைய நிலை மற்றும் அவர்களுக்கான ஆலோசனைகளும் வழங்கி வைக்கப்பட்டதுடன் மாணவர்களின் மதிப்பீட்டினை அறிந்து கொள்ளும் வகையில் “Practical sheet” வழங்கப்பட்டு பெறுபேறுகள் மதிப்பிடப்பட்டது.

மேலும் இச் செயற்பாடுகளுடன் நிறுத்திவிடாது எதிர்காலத்தில் மாணவர்களுக்கான வாழ்வியல்ப் பயிற்சி வழங்குவது பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது.







# முதன்மை பாலர் பாடசாலைக்கான களவிஜயம்



சிறுவர் பராமரிப்புத் திட்டத்தின் கீழ் பாலர் பாடசாலைகளைப் பொறுப்பெடுத்து அவர்களுக்கான உதவிகளை நாம் வழங்கி வருகின்றோம். அந்த வகையில் மாதாந்த கணக்கறிக்கை மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்கான அறிக்கைகளை பார்வையிடுவதற்காக களவிஜயம் மெற்க்கொள்ளப்பட்டது. இதன்போது மாதாந்த கணக்குகள் ஆய்வு செய்யப்பட்டதோடு அவர்களுக்கான மற்றும் சிறுவர் பாராமரிப்பு பற்றி ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.

வறுமை நிலையில் தாய், தந்தையை இழந்த, குடும்ப வருமானம் மிகவும் குறைவாக உள்ள குடும்பத்தில் பாடசாலைக் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு கற்றலுக்கான மாதாந்த கொடுப்பனவு வழங்குவதன் மூலம் மாணவர்களின் வலுவூட்டலுக்கான செயற்பாடுகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம். அந்த வகையில், மாணவர்களை பொறுப்பெடுத்து முதற்க்கட்ட உதவித் தொகை வழங்கிவைக்கப்பட்டது.



**Sponsor a Student**

**per Month – LKR 3,500**

அவ்வாறே எமது திட்டத்தினுள் உள்வாங்கப்பட்டு உதவித்தொகை பெற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கான களவிஜயம் மேற்க்கொள்ளப்பட்டது.

விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் மாதாந்தம் விசேட உணவு வழங்குதலை முன்னெடுத்து வருகின்றது.

- அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
- மயிலம்பாவெளி வாழும்கலை நம்பிக்கை நிதியம்
- நந்தவனம் முதியோர் இல்லம்
- புகலிடம் (சத்துணவுப் பொதிகள்)



இவ்வாறு எமது சிறுவர் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு நீங்களும் உங்களால் முடிந்த உதவியை வழங்குவதன் மூலம் எமது சமூக வலுவூட்டலில் பங்களிப்பை மேற்கொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கு

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569

## Donation – Request details

**Annai Sri Sarada Center**

Special Meal per Day - LKR 40,000

**Sponsor a Pre-School**

per Month - LKR 65,000

Nutritious Food per Child - LKR 3,000

**Jeevananda Girls Home**

Special Meal per Day - LKR 20,000

**Nandavanam Elders Home**

Special Meal per Day - LKR 15,000

**Sponsor a Youth**

per Technician - LKR 10,000

**Sponsor a Student**

per Month - LKR 3,500

**Nutrion Pack for Pugalidam Disables Center**

per Pack - LKR 3,500

**Education Materials For School students**

per Pack - LKR 5,000